# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உக } திருவள்ளுவர் யாண்டு ௲௯௱அ௪ விசய—ஆடி 1953—சூலை { மலர் ௪

## பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

௨

## கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

---

தமிழ்த்தாயின் அருள்நலத்தால் தமிழன்பர்கள் உள்ளத்தும் சிறப்பாகத் தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, இராதாகிருட்டினப் பிள்ளை அவர்கள் உள்ளத்தும் முகிழ்த்தெழுந்த முயற்சியால் (14—5—1911) 1911 ஆண்டு வைகாசித்திங்கள் முதல்நாள் நல்லோர் பலரும் வாழ்த்த உருப்பெற்ற இக் கரந்தைத் தமிழ்ச் சங்கமானது நாடோறும் மெல்ல மெல்ல வளர்ந்து இராதாக்கிருட்டினத் தொடக்கப் பள்ளியையும் உமாமகேசுவர உயர்தரப் பள்ளியையும் தன்பால் நிறுவித் தமிழ்த் தொண்டாற்றி வந்தது.

பின்னர் சங்கப் பேரன்பர் உள்ளத்தும் சிறப்பாகத் தமிழவேள் உள்ளத்தும் மூகிழ்த்தெழுந்த கரந்தைப் புலவர் கல்லூரி தமிழ்ச்சங்க வெள்ளிவிழாவின் இரண்டாம் நாளாகிய வெகுதானிய சித்திரை 4 (16—4—1938)ல் திருக்

கோவலூர் அருள்நிலையம் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் திருமடத்தின் தலைவர், அருட்டிரு, சிவசண்முக மெய்ஞ் ஞான சிவாச்சாரிய சுவாமிகள் திருமுன்னர்த் தோற்றம் பெற்றது. தமிழவேளவர்களின் தளராமுயற்சியால் 1941 ஏப்ரலில் சென்னைப் பல்கலைக் கழகத்தார் இக் கல்லூரியை ஏற்றுக்கொண்டு தனித்தமிழ் வித்துவான் தேர்விற்குப் பயிற்றுதற்குறிய ஒப்புதல் அளித்தனர்,

எனவே சங்கம் இம் மூன்று கிளையுடனே கூட்டுறவுப் பதிப்பகத்தின் மூலம் சிறந்த திங்கள் வெளியீடாகிய தமிழ்ப்பொழிலையும் வெளியிட்டுப் பல்லாற்றானும் தமிழுக் கும் தமிழ்நாட்டிற்கும் அரிய தொண்டாற்றிவந்தது. பின்னர் பொருள் முட்டுப்பாட்டினால் இடையூறுற்ற ஞான்று திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத் தெய்வத்திரு அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் 1949-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் இக்கல்லூரி முதலான கல்வி நிலையங்களைத் தங்கள் பொறுப்பிலேயே ஏற்றுச் செம்மையாகப் புரந்துவந்தார் கள். அவர்களுக்குப் பின்னர் அருட் செங்கோலோச்சும் தெய்வத்திரு சுப்பிரமணிய தேசிக பரமாச்சாரிய சுவாமி கள் 1953ஆம் ஆண்டு சூன் திங்களில் எல்லா வகையான பொறுப்புக்களையும் சங்கத்தாரிடமே விட்டுவிட்டனர். சங்கத்தார்பின்னர் உறுப்பினர்களடங்கிய பொதுக்கூட்டம் ஒன்றை 27—4—53ல் கூட்டித் திருவாளர் முத்தமிழ்ப் புரவலர் A. Y. அருளாநந்தசாமி நாடார் அவர்களை மீண்டும் தலைவராகவும் திருவாளர் S. சுயம்பிரகாசம் B. A, B. L. M L. A. அவர்களை அமைச்சராகவும், திருவாளர் N. L. வரதராசுலு நாயுடு அவர்களைப் பொருளாளராகவும் முன்னுள் அமைச்சர் திருவாளர் நீ. கந்தசாமி பிள்ளை அவர் கள் திருவாளர் T. P. வேதாசலம் பிள்ளையவர்கள் B. A.

திருவாளர் சிவவடிவேலு உடையார் அவர்கள், திருவாளர் தருமராசுப் பிள்ளை அவர்கள் ஆகிய இவர்களைச் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுத்தனர். தற்போது சங்கத் தலைவர் வுட்பட சங்க உறுப்பினர்கள், அன்பர்கள் முதலிய எல்லோருடைய நன் முயற்சியாலும் ஆதீனத்தார் அவர்களின் பொருளுதவியாலும் செவ்வையாக மேற்கண்ட கல்வி நிலையங்கள் தக்கவர்களைக் கொண்டு நடத்தப் பெறுகின்றன. தமிழ் மொழியும் தமிழ் நாகரிகமும் உயரவேண்டுமென்று கருதிச் செயல்புரியும் தமிழ் மக்கள் யாவரும் தமிழ், தமிழ்ப்பண்பு, தமிழ் நாடு' இவைகளின் முன்னேற்றத்திற்கென்றே தொண்டாற்றும் இச் சங்கம் எல்லா வகையிலும் சிறக்க வேண்டிய உதவிகளைத் தங்களால் இயன்ற அளவுக்குப் புரிவது தங்கள் கடமை என எண்ணி உதவ வேண்டுகிறோம்.

# ஒரு வேண்டுகோள்,

---

நம் சங்கம், பொழில், கல்லூரி முதலியவற்றின் தொடக்கங்களில் உடன் மேவி, சிறந்த பொறுப்பேற்றுத் தம்மாலாகும் தொண்டுகளைப் புரிந்து வந்த, கவியரசரைத் தமிழுலகம் நன்கு அறியும்.

அவர், இப்போது உடல் நலமின்மை முதலியவற்றால், சங்கத் தொண்டுகளின் பொறுப்பு உரிமையினின்று விலகி, தனியே நின்று, தம்மிடம் வரும் சங்கத் தொண்டுகளை இயன்றவரை புரிந்துவரும் நிலையில் உள்ளார். அவர்களைப் பற்றிச் சங்கப் பேரன்பர், உயர்திரு பொன்னண்ணாக் களத்தில் வென்றார் அவர்கள் எழுதிய வேண்டுகோள் ஒன்றை நம் அன்பர்கட்குத் தெரிவிக்கின்றோம்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் அடித் தொண்டருள் ஒருவராகிய கவியரசர் அரங்க (R) வேங்கடாசலம் பிள்ளையின் சங்கத் நொண்டுகள், பள்ளி, கல்லூரிகளின், தொண்டுகள்:, நூற்றொண்டுகளைப் புலவர் உலகம் அறியும்.

அவர், இதுபோது, உடல் நலம், பொருள் நலம் குறையப் பெற்றாராய், தளர்ச்சிகள் எய்தியுளார். அவர் இனியும், சிறப்பாகப் புலவர் மாணவர்கட்கும், பொதுவாகத் தமிழ் அறிஞர் உலகிற்கும் அரிய தொண்டுகள் செயற்பாலர், பொருளதிகாரம், சேனாவரையம், திருக்குறள் உரைகள் முதலாயவற்றில் பல அரிய குறிப்புக்களை எளிதாக விளக்கிக் காட்ட, ஊக்கங் கொண்டுள்ளவர். அத்தகைய குறிப்புக்கள் பல அவர் தம் கைவசம் உள்ளன:

அவர், பேரன்பர்களாகிய புலவர் மாணவர்கள், தமிழாசிரியர்கள், அத்தளர்ச்சிகள் நீங்கிஊக்கம், உருப்பெற்றெழ தாம் தாம் மனமுவந்து, ஐந்து ரூபா அளவினதாகிய ஒரு நன்கொடை அவர்க்கு அனுப்பி வைப்பார்களாக, அவர் தம் நண்பர்களாகிய தமிழ்ச் செல்வர்கள், தாம் மனமுவக்கும் நன்கொடையினை அனுப்பி அருள்வார்களாக.

அன்பன்,

அ. பொன்னண்ணாக் களத்தில் வென்றார்.

அன்பர்கள், இவர் வேண்டுகோளை உளங்கொண்டு இயலும் அருள் உதவி புரிவார்களாக.

# எங்கள் குலம்.

வித்துவான் திரு. பொ. தண்டபாணி, பி. ஏ. புதுவை.

(முற்றொடர்ச்சி: துணர் உகூ—மலர் ந—பக்கம் 72)

அருளே வடிவான மீனாட்சியம்மையின் உறைவிடமான பொதிய மலையைப்பற்றிக் கூறக் கேட்போமாக.

நாம் உடுக்கும் துணிகளில் கறையிருந்தால் அழகாக இருக்கிறது. நமக்கு உகந்த கறைகள் இருக்கப்பெற்றால் நாம் அவற்றைச் செருக்குடன் அணிகிறோம். அதிலும் பட்டு, பீதாம்பரம், சரிகை முதலியன உடைய ஆடைகளை அடிக்கடி அணிய நமக்கு அவா உண்டு. எனவே பொன்வேய்ந்த துணிகளைப் பெரிதும் போற்றி வாழ்கிறோம். எனவே பொற் சரிகை உடைய வேட்டிகளை நாம அதிக விலைக்கு வாங்கு வதும் இயற்கையாயிருக்கிறது. பொனனுக்குச் சமமாகப் பரவுந் தொழிலும் குணமும் உண்டு. அதைப்போலவே பனிக்கும் உண்டு. மேகங்களில் பனி நிறைந்திருந்தால், கருநிறமாகிக் கனத்துக் குளிர்ச்சியைத் தரும். அத்தகைய மேகங்கள் மலிந்து சூழ்ந்தவண்ணம் காணப்படும். பொதிய மலையில் அம்மை சொக்கேசர் மனைவி இன்பார்ந்திருக் கிறார்கள் என்று குறத்திமார்கள் குறிசொல்லும்போது பாடு கிறார்கள். மேலும் "கற்புடைய மங்கைக்குக் கணவனே தெய்வம்." அந் நங்கையின் கற்பினை யார்தான் போற்றார்? ஆதலின் கலையெலாம் புகழும் கற்பே சிறந்தது. மொட்டறா மலர் எப்படி பூசைக்குச் சிறந்ததோ அவ்வாறே பழிப்புறாத கற்புஞ் சிறந்ததென்க.

இக் கற்பினை ஆண்களும் போற்றின் நாம் வாழும் இவ் வுலகம் நல்ல சீர்திருத்தம் பெறும். நிற்க, இக் கற்பினை ஓர் ஆறு பெற்று வாழ்ந்ததாகக் குறத்திமார்கள கூறுவர். அவ் வாற்றின் பெயர்தான் வைகைநதி. இவ் வைகையாறு கண வனைத் தவிரக் கடவுள் வேறில்லை எனறிருக்கும் சிறப்புற்ற பெண்ணைப்போல, தான் பாய்ந்தாலும் நிலங்களும் வயல்களும் தவிர வேறோர் கடலைச் சங்கமமாகப் பெற்றிலது என்று கூறுவார்கள்.

பிறகு, பழமையில் தோய்ந்தது பாண்டியநாடுதான். எத்தனையோ பிரளயங்கள் வந்தன. பல்வேறு நிலப்பரப்பை நீர்ப்பரப்பாக்கின. எண்ணற்ற நீர்ப்பரப்புகளும் நிலப்பரப்பாயின. அப்போதும் பாண்டிநாடானது முன் இருந்தவாறே இருந்ததாம். எப்படித் தெரியும் என்றால், பாண்டி நாட்டில் உள்ள கற்களையும் (கருங்கல், மலைக்கல்) ஏனைய நாட்டுள்ள மலைக்கல்லையும் ஒத்திட்டால், உரத்தில் பாண்டிநாட்டுக் கல்லே சிறப்பாகப் பேசப்படுகிறது. இவ் வுண்மையினை வேண்டுமானால் சோதித்துப் பார்க்கலாம். அவ்வளவு பழமை தோய்ந்த பாண்டிநாட்டின் பெருமைக்குப் பிறப்பிடமாயிருந்த ஸ்ரீ மீனாட்சி அம்மையை யார்தான் போற்றார்?

பெண்கள் ஆட்சியில் தலைகுனிந்து வாழ்தலை ஒருசில ஆண்கள் எப்போதும் வெறுத்தே வருவர். இது இயல்பு. மாற்றவோ, மறைக்கவோ முடியாத உண்மை. எனவே அண்டரண்ட சராசரங்களைப் படைத்துங் காத்தும் அழித்தும் வரும் எம்பெருமானை ஆட்டுவிப்பதே தனக்கு ஆடலாகக் கொண்ட அங்கயற்கண் அம்மையாரின் ஆட்சியையுங் கூட அக்காலத்து மக்களிற் பற்பலர் எல்லாத் திசைகளிலும் வெறுத்துப் பேசினராம். வேம்பாகக் கசந்தனராம். அவ்வளவு கசப்பாக உலக மக்களுக்கு ஆட்சிக்கண் அம்மையார் தோன்றிய போதிலும் தமது கணவர்க்கும் என்றும் மாறாத பேரின்பப் பெருங்கருணைப் பெருக்காகவே இருந்தவர் என்று குறத்தியர்கள் தங்கள் பாடல்களில் கூறுவர்.

இன்னும், செஞ்ஞாயிறு நாள்தோறும் செம்மையாகச் சுழலும் நெறியில் ஆற்றலில் ஓர் சிறிதுங் குறைபட்டதே கிடையாது. ஆனால் அதனைத் தோற்கடித்த செழிப்பான குதிரைகள் பாண்டிய மன்னன்பால் இருந்தனவாம். அக் குதிரைகளைக்கூட சொக்கேசர் மண்குதிரைகளாக மாற்றினர். அத்தகையோரின் அரிய மனைவியின் பெயரைச் சொல்வார்கள்

உலகுக்கோர் தனிப் புரவலன் என ஓங்கும் எம்பெருமான் திசை எட்டுக்கும் தானே தனி நாயகன். அவன் மனைவியின் பேரைச் சொல்வர் இடபக் கொடியமையாது மீனக்கொடி தாங்கிய சொக்கநாதரின் மனைவியான அம்மையின் அருட் பெயரைக் கூறுவர்—இடபக் கொடிவந்த வரலாறும் மீனக் கொடிபெற்ற சரிதையும் திருவிளையாடற் புராணத்தே காண்க.

நாதனின் ஆட்சி திறத்தைவிட நாளும் அருள் சுரக்கும் இயல்பினைப் பெற்ற அம்மையின் சிறந்த ஆட்சியைப் பாடிக் களிப்பார்கள். பிரம்மன், திருமால், சிவன் முதலிய பல பெருஞ் சிறப்புத் தலைவர்களும் வணங்கி வாழ்த்தி வரும் தனிநாயகன் வாழும் கைலைக்குத் தலைவியாக விளங்கும் உமை (பார்வதி)யின் அருஞ் செல்வியான மீனாட்சியம்மையாரின் செயல்களைப் பாடிமகிழ்வார்கள்.

ஓயாது உலாவும் தொழிலை மேற்கொண்டொழுகும் ஞாயிறுந்திங்களும், விண்ணகத்தே நிலவும்போது அவற்றையே தனது கணவருக்குக் குடையாக முடியில் தரித்து விட்டுத் தனக்காக ஓர் வெண்மையான குடையைத் தாங்கி மண்ணுலக மக்கள் அனைவரையும் இன்புடன் காத்து வருகின்ற முழுக்கு வல்லியை அக் குறத்திமார்கள் பெரிதும் உவந்து பாடுவர்.

அகத்தழகு முகத்தில் தெரியும். அகத்தே கோபக் கனல் மூண்டெரியுங்கால், முகமானது முக்கியமாக புருவங் கள் இரண்டும் சுருங்கிய தோற்றமளிக்கும்—கண்கள் மீள விசாலமாக, விகாரமாக விரிந்து தோன்றும். அவ்வாறு அம்மையும் ஓர் தரம் காட்சியளித்தார்கள். எப்போது? திரிபுரம் எரிந்தபோது தாராக்கன, கமலாக்கன், வித்துவன் மாலி இம் முக்கொடிய அரக்கர்கள் தேவர்களை (நல்லவர்களை) மிகவும் கொடுமை செய்வதைக் கேள்விப்பட்ட பெண்ணரசி நங்கள் நாயகி கோபித்துத் தீர்த்துக்கட்டினர். இச் செயல் பெண்ணினத்திற்கே ஓர் அரிய சிறப்பாகிறது. அத்தகைய நாயகியின் அருளைப் பாடுவார்கள்.

“யாவும் எனதல்ல” “எல்லாம் நானே” என்ற உயரிய சிந்தனையுடன் எதும்போட்டில் பிச்சையேற்று உண்டு மகிழ்ந் திருந்த எம்பெருமாற்கு, ஏழேழ் உலகங்களையும்தான் ஆண்டு வந்த அச்செயலைக் கணவன் பாலுற்ற தனது கற்பு நிறைந்த அன்பின் அறிகுறியாகக் கொடுத்து அன்னோர்க்குக் கட்டுப் பட்டு ஒத்த மனத்துடன் உறையும் நாயகியின் பேராற் றலைப் பாடுவார்கள். இங்கே மீனாட்சி அம்மையார் தனது ஆட்சியினைத் தனது கணவனுக்கீந்து பிறகு அவரது செங் கோலின் கீழ்த்தான் அடங்கி வாழ்வதைக் குறிக்கோளாகக் கட்டியிருப்பதைக் நவீனப் பெண்மணிகள் நன்றாகத் தங்கள்

உள்ளத்தே பதிந்து கொள்வார்களே ஆமாயின் நாம் வாழும் இவ்வுலகம் நன்றாய்ப் பொலியும் இதில் ஐயம்வேண்டாம்.

இந்திரன் என்ற பெயரோடு அநேகர்உளர். கைலையில் இருப்பவர்களுக்குப் பொதுவாகவே இந்திரர்கள் என்ற பெயருண்டு, அவர்களுள் ஒருவனுன இந்திரனுக்கும் உக்கிர பாண்டியனுக்கும் போர் ஏற்பட்டது. காரணம் திருவிளை யாடல் புராணத்தே பரக்கக் காணலாம். அச் சண்டையில் உக்கிரப் பெருவழுதியே வெற்றி பெற்றனன் இந்திரன்றன் தலையை சிதறச் செய்தான். அதற்காக அம்மை அவர்கள் அவனுக்குப் பெரும் பொருளாம் தம் அருளை ஈந்தார்கள். அதனைக் கூறிப் பாடுவார்கள்.

நல்ல மணமலர்களைப் புனுகு, சவ்வாது முதலிய பல நாற்றங் கமழும் பொருள்களுடன் கலந்து அம்பிகை தனது சடையில் அணிந்தாள். அவள் உறைவிடம் பொதியமலைக் காடு. அவ்வாசனை காடெங்கும் பரவிற்று. தேனீக்கள் கூட்டம் கூட்டமாக ஒலித்துக்கொண்டு ஓடிவந்துக் குவிந்தன. ஏன் ? அம்மலர்களிலுள்ள தேனைப் பருக. சடையோ நீண்டு அழகாக இருக்கிறது. அதனைக்கண்டு இளநிலாவும் பொறு மைப்பட்டது. அழகுள்ள இரு பொருள்கள் ஒன்றாய் இயங் கின் பொறாமைக்குணம் மெல்ல மெல்ல நுழையும் போலும்! சடையும் நிலாவும் தமதழகில் தோற்கும்படி அம்மையின் திருவடிகள் அழகிற் றலை சிறந்து விளங்கின. அவ்வடிகளை நோக்கிய குறத்திமார்கள் மெய்ம்மறந்து அம்மையைப் பாடிய வண்ணம் நின்றனர்.

திருநீலகண்டன் என்று பரமசிவனை அழைப்பார்கள். கழுத்தில் நீலம் எப்படி வந்தது? புராணத்தில் பரக்கக் காண்க. அக்கொடிய நஞ்சை பரமசிவத்தின் நடுவே அமர்ந் துள்ள பார்வதியானவள் அமிழ்தமாகச் செய்து விட்டாள். இது ஓர் பெரியகாரியமல்ல ஏன் என்றால் நாம் கடையிலிருந்து வெறும் உளுந்து, பூசுணைக்காய் முதலியன வாங்கிவந்து நமதில்லாளிடம் தருகிறோம் அவள் அவற்றை வடையாகவும் சுவை நிறைந்த கறியாகவும் மாற்றித் தருகிறாள் அல்லவா? அதைப்போலப் பார்வதியானவள் பரமசிவனுள்ளே சென்ற நஞ்சை அமுதமாகச் செய்தாள் என்றால் அஃதோர் சாதா ரணச் செயல்தான். அச்செயலைக் குறத்தியர்கள் பாடுவர்.

குழந்தைகள் சிற்றில் விளையாடும். அம்மையும் அண்ட ரண்டங்களை எல்லாம் படைத்துக் காக்குந் தொழிலில் தனது விளையாட்டைச் செய்கிறாள் அப்போது அவள் கைகளிலுள்ள வளையல்களும் ஒலிக்கின்றன. அதனைப் போற்றிப் பாடுவார்கள்.

நின்மலன், அமலன், விமலன், நிர்க்குணன், நிர்விடயன், நிரபராதி என்றெல்லாம் வேதங்கள் பரமசிவனை அழைக்கின்றன. இஃதுண்மை. இதைக்கேட்ட அம்மைக்கு ஓர் புதிய கருத்துண்டாயிற்று. என்ன அது? தனக்கு மிக அழகிய முகம் உண்டு. முலைகள் உண்டு. வளையல்களும் உள்ளன. தன்னையே பரனுக்கீந்து தனதாய வளையல் முலைகள் முதலிய குறிகளைக் கடவுளுக்குக் கொடுத்து விடுவோம் என்றெண்ணினர். எண்ணியவாறே செய்து காட்டினர் உலகோர் கண்டு வணங்கினர். அம்மை அப்பராகக் காட்சி ஏற்றனர். என்ன! ஒன்றுமில்லாதிருந்த நமது பரமசிவனுக்கு வளையல் முலைகள் இவற்றால் ஆயகுறிகள் எங்குற்றன? ஏன்? எப்படி வந்தன? என வாதிக்கலாயினர். அத் திறத்தினை மெச்சிக் குறத்தியர்கள் பாடுவதுண்டு.

பிறகு அம்மையின் அரிய குணங்களையும் முத்தமிழ் ஆய்ந்த உடலின்கண் வாழநேர்ந்த சுந்தரனர் மனைவியானதையும் சீரிய தமிழின் சிறப்பியல்புகளையும் பாடுவர். இடையே, நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் கூறியுள்ள குறவர் குறத்தியர் முதலியவர்களின் செயல்களையும் இங்கே கவனிப்போமாக.

கொலைத் தொழிலையுடையவர் வில்லைக்கையில் உடையவர். சந்தனம் பூசுவர். மூங்கிற் கள்ளை அருந்துவர். தொண்டகம் என்னும் பறையை உடையவர். குரவைக் கூத்தாடுவர். குடிதழுவி வாழ்வர். பெண்கள் நல் இசையில் தேர்ந்தவர்கள். மட நடையை உடையவர்கள். மயில் இனங்கள் போன்ற அழகுடையவர்கள். மெல்லிய மான்பிணைகளைப் போன்ற உடம்பினர். வேலன் அவர்களைக் கூசாமல் எடுத்துக் கூத்தாடுவான். அத்தகைய பழக்கம் இக்காலத்திலும் அசாம் திருவனந்தபுரம், கொச்சின், பஞ்சாப் முதலிய இடங்களில் உள்ள மக்களிடம் காணப்படுகிறது.

வேலன் யார்? இவனுக்கென்ன வேலை? இவன் குறவர்களின் குருக்கள். பூசை செய்வோன். இவன் மரவுரியும்

பச்சிலையும் ஆடையாகத் தரிப்பான். பச்சிலைக்கொடி, சாதிக்காய் தக்கோலக்காய், காட்டுமல்லி, வெண்தாளி முதலிய வற்றால் ஆய ஆடையைத் தரித்து மகிழ்வான் சிவந்த மேனியன் சில சமயங்களில் சிவந்த ஆடையை அணிபவன். காதில் அசோக மலரிதழை உடையவன். காலில் கச்சையுங் கழலும் பெற்றவன். கழுத்தில் வெட்சிமாலை சூடியவன். குழலும் கொம்பும் ஊதுவான். தோளில் கடகம் அணிவான். இடுப்பிலிருந்து கால்வரையில் தாழும் ஆடையினன். பாடும் பெண்களுடன் தானுங் கலந்து பாடுவான்.

### குறவர்களின் சிறந்த செயல்கள்.

மூன்றுவகை அரிசியைக் கூட்டிப் பரப்புவர் அவையாவன :—

1. தினை அரிசியும் ஆட்டின் இரத்தமுங் கலந்தது.
2. வெண்சிறு கடுகும் நெய்யும் கூடியது.
3. அரிசியும் மாட்டின் இரத்தமுங் கலந்தது.

கோழிக் கொடியை நடுத்தெருவில் நிறுத்தி விழாக் கொண்டாடுவர். நெய்யும் வெண்சிறு கடுகுந் தூவியபின்பு, வணங்குவர் அதன்பிறகு மலர்களைத் தூவுவர். சிவப்பு நூலைக் காப்பாகக் கட்டிக் கொள்வர் வெவ்வேறு நிறங்களை உடைய ஆடையை உடுப்பர். வெண்பொரியை அள்ளித் தூவுவர். பசு மஞ்சள் நீரும் வாசனை நீருந் தெளிப்பர். இவ்வேலை கோவில்களுக்குள்ளே நிகழ்வது. மாலை அணிவர்; தூபங் காட்டுவர். குறிஞ்சிப் பாக்கள் பாடுவர். வாத்தியம் முழங்குவர். "பிணிமுகம்" என்னும் யானையை வாழ்த்துவர்.

இத்துடன் நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் கூறியதை நிறுத்தி, குமரகுருபரர் முடிவாகப் பேசி இருப்பதைக் கூறிப் முடிப்பேனாக.

குறவர்கள் எப்போதும் முடிவாகச் சொல்லிக்கொள்வதாவது :—

நீர்வளம் நிறைய இருக்குமாக. இறைவன் இன்ப அருள் நிறைந்தோங்குமாக. மேகங்கள் குளிர்ந்து சூல்கொண்டு சூழுமாக. அந்நாள் வாழ்ந்த திருமலைநாயகன் பேரும் அவன் அறத்தான் ஈட்டிய செல்வமும் பெரிதும் வாழி வாழியே.

# துன்ப நிலை.

வித்துவான் திரு. மு. சடகோபராமாநுசம் பிள்ளை அவர்கள்,
விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி.

(முற்றொடர்ச்சி: துணர் உகூ—மலர் ௩—பக்கம் 92.)

வேறு பள்ளிகளில் உள்ள மாணவர்களின் நிலையும் அது தான். இந்நிலையில் இவரது கல்வியின் விரைவு விளக்கம் ஆகியவற்றைக் கண்ட ஆசிரியப் பெருந்தகையார், 'இவன் மேல் நிலைக்கு வருவான்' என்றெண்ணினர். எண்ணிய அவர்கள் வாளாயிராது ஆவனவற்றைச் செய்யத் தொடங்கி, மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இவரோடு இன்னுஞ் சில மாணவர்களையும் சேர்த்து 1917ஆம் ஆண்டில் கொண்டுசேர்த்தார். அப்பொழுது அங்குத் தலைமை ஆசிரியராக இருந்தவர் திரு. நாராயண ஐயங்கார். அவரது கூர்த்த மதியும் கல்வி கற்பிக்கும் அருமையும், அசைக்க முடியாத உரை நடை எழுதும் ஆற்றலும், தர்க்க முறையும், தமிழ்நாடு அறிந்தனவே. இங்ஙனம் பல்வகையாலும் சிறந்து விளங்கிய அவரிடம் ஒப்புவிக்கப்பெற்ற நம் பிள்ளை அவர்கள் எந் நிலையில் உயர்ந்திருப்பார்கள் என்பதைச் சொல்ல வேண்டுமா? ஆண்டவனிடம் சேர்ந்த ஆன்மா போல் ஒளிவிட்டு விளங்கினர்கள்.

இந்நிலையில் இவரோடு கல்வி பயின்ற மாணவர் சிலர் பாடங்களில் பாரம் தாங்கமுடியாதவர்களாய்ப் பள்ளியை விட்டு விலகினரும் சிலருண்டு. இங்ஙனம் பயின்று வருங்கால் தமிழ்ச் சங்கத்திற்கு ஒரு தடவை தமிழிலக்கியக் கடலை நிலைகண்டுணர்ந்த திருவாளர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களும், சமயக்கடலை அள்ளி மடுத்த அண்ணங்கராச்சாரியாரும் வந்திருந்தனர். அப்பொழுது அவர்கள் வழக்கம் போல் அவர்களைச் சில கேள்விகள் கேட்டார்கள். அவற்றிற்கெல்லாம் வெடுக்கு வெடுக்கென்று விரைவில் விடை இறுத்த இவரது நுண்மாண் நுழை புலத்தைக் கண்டே ஐயர் "விளையும் பயிர் முளையில் தெரியும்; என்ற பழமொழியை இவர்பால் கண்டேன்; விரைவில் மேல்நிலைக்கு வருவார்," என்று கூறித் தன்னருகழைத்துத் தைவந்தார். இந்நிலையில் பாடங்கற்பிக்கும் ஆசிரியர்கட்கும், வருகின்ற

பெரியார்கட்கும் நல்ல மாணவராக ஒழுக்கமும் அடக்கமும் உடையவராய் நடந்து நான்காண்டுகள் கல்வி பயின்று பால பண்டிதத்தில் தேர்ச்சிபெற்றுச் சங்கத்தார், இரண்டாவது பரிசிலாக அமைத்திருந்த முப்பது வெண்பொற் காசுகளும் பெற்றூர்; ஆனுல் முதல் தரப் பரிசில் பெருத தற்குக் காரணம் தேர்வு மூன்று திங்களிருக்கும்போது வழக்கம்போல் வருகிற வாதநோய்க் குள்ளானர், அதுவே யாம்.

இங்ஙனம் இவர்கள் இவ்வாறு தம் பள்ளிப்படிப்பை ஒருவகையில் முடித்துக்கொண்டார். பின் தமது குடும்ப நிலை காரணமாகப் பொருள் தேடும் முயற்சியில் ஈடுபட வேண்டியதாயிற்று. முதல் முதல் திருப்பாதிரிப்புலியூர் நகரசபை உயர்நிலைப்பள்ளியில் ஆறு திங்கள் தமிழாசிரியராக அலுவல் பார்த்து வந்தார். அக்காலத்தில் அப்பள்ளித் தலைமை ஆசிரியராக விருந்த பெரியார் தமக்கு ஓய்வு நேரங்களில் எல்லாம் அவர் பாடம் நடத்தும் முறையைக் கண்டு களிக்க வகுப்பறையில் வந்து தங்கிவிடுவார். இவ்வாறு நல்லாசானுய் அங்கிருக்குங்கால் இவரது கல்வித்திறம் அறிவின் நுட்பம், விளக்கமாகப் பாடஞ் சொல்லும் முறை இவற்றை அரங்க. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் வாயிலாக அறிந்த திருவாளர் மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் அவர்களை வருவித்து மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை கணேசர் செந்தமிழ்க் கலாசாலையில் இவரை ஒரு தலைமைத் தமிழாசிரியராக அமைத்துக்கொண்டார். அச்சபை பண்டிதமணி அவர்களின் பெரு முயற்சியால், பழநியப்பச் செட்டியார் அவர்கள் பொருளுதவியைக் கொண்டு நிறுவப்பெற்றது. அது செட்டிநாட்டில் தோன்றிய சபைகள் எல்லாவற்றிற்கும் முற்பட்டது. அச்சபையில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் நடத்தப்படுகிற, பிரவேச பண்டித, பால பண்டித தேர்விற்கு மாணவர்களை அனுப்பி வந்தார்கள். அக்கால ..களில் பண்டிதமணி போன்ற பெரும்

புலவர்களும், செந்தமிழ்ச் செல்வர்களும் இவர்களது கல்வி அறிவொழுக்கங்களையும், நடைமுறைகளையும் கண்டு மகிழ்ந்து மிக நெருங்கிய தொடர்புடையர்களாக ஆனார்கள். அங்கு இவர்பால் பயின்ற மாணவர்கள் பலர் தமிழ்ச் சங்கத் தேர்வுகளில் வெற்றி பெற்றுத் தமிழ் நாட்டில் பல விடங்களிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் இலக்கண, இலக்கிய நுட்பம் வாய்ந்தபெரும் புலவர்களாக இருந்து மாணவர்கட்குத் தமிழ்ப் பயிற்றி வருகின்றனர்.

இவ்வாறு அவர்கள் அங்குப் பணியாற்றி வரும்போது கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களும், பல்கலைப்புலவர் கரந்தைத் தமிழ்ச் சங்க அமைச்சர் திருவாளர் நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்களும் நெருங்கிய நண்பரானார்கள். தில்லையிலிருந்து மேலைச் சிவபுரி செல்லும்போதெல்லாம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குச் செல்லாமல் செல்லார். தமிழ்ச் சங்கம் உமாமகேசுவரம் பிள்ளை என்றால் இவர்க்கு உயிர். தமிழவேள் இறந்தார் என்று செய்தி கேட்டு வருந்தியவர் "இனித் தமிழ்ப்புலவர்களைத் தக்கமுறையில் ஆதரிப்பார் இல்லை யென்றே சொல்லிவிடலாம்" என்று கூறித் துன்புற்றார். இந்நிலையில், உமாமகேசுவரம் பிள்ளை அவர்கட்கும் இவர்கட்கும் தொடர்பு மிக நெருக்கமாயிற்று. இவர்களது தெளிவான அறிவிலும் விளக்கமான பேச்சிலும் த. வே. உ. அவர்கள் மிக விருப்பம் கொண்டார்கள். தமிழ்ச் சங்க ஒவ்வோராண்டுவிழாவிலும் இவருடைய பேச்சு இல்லாமல் இருக்காது. சில சமயங்களில் இடை இடையே வரவழைத்துச் சொற்பொழிவு ஆற்றச் செய்வதும் உண்டு. ஒரு சமயம் பண்டிதமணி மொழிபெயர்த்த சுக்கிர நீதியைப் பதிப்பிப்பதற்கு இவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திலேயே சில திங்கள் தங்கியிருந்தார்கள் அவர்கள் தங்கி இருந்த காலமெல்லாம் த. வே. உ. அவர்கட்குப் பெருமகிழ்ச்சி அளித்துவந்தது. ஆண்டு

தோறும் தீபாவளியன்று, த. வெ. உ. அவர்கள் தில்லையில் கூத்தப்பிரானை வழிபடுவதற்கு வருவார்கள். அப்பொழு தெல்லாம் இவர்கள் வீட்டிற்கு வராமற் போகார். நிற்க.

பின்னர் இவர்கள் காலநிலையை யுன்னி சன்மார்க்க சபையாரிடம் விடைபெற்றுக்கொண்டு தில்லையில் அமைத்த புலவர் பயிற்சிக் கல்லூரியில் பயிலுவதற்குத் தில்லைக்கு வந்தார். அப் பயிற்சிப் படிப்பு முடிந்த வுடன் தந்தையாருடைய விருப்பப்படி சிதம்பரம் இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப்பள்ளியில் 1927-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தலைமைத் தமிழாசிரியராக அலுவல் பார்க்கத் தொடங்கினர். அப்பொழுது சென்னை தனித்தமிழ் வித்துவான் தேர்விற்குச் செல்லவிரும்பி அதற்குரிய பாடங்களை வீட்டிலிருந்தபடியே பயின்றுவந்தார். இளமையில் அடிப்படையில் ஆழ்ந்த படிப்புள்ள இவருக்கு எந்தப் பாடமும் எளிமையாயிற்று. இந்நிலையில் 1928-ஆம் ஆண்டு வித்துவான் முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றூர். அடுத்த ஆண்டே இறுதிநிலைத் தேர்விற்குப் போதல் கூடா தென்ற சட்டம் இருந்ததனல் பிள்ளையவர்கள் அடுத்த ஆண்டே தேர்விற்குச் செல்லுதல் தடைப்பட்டது; அது வும் ஆண்டவன் திருவருள் போலும். ஏனெனில் தமி ழோடு வடமொழி சிறிது பயின்ற ஒருவருக்கு 1929-ஆம் ஆண்டு திருப்பனந்தாள் ஆதீனத்தார் ஏற்படுத்திய பரிசு கிடைக்கவேண்டுமென்ற ஊழ் இருப்பதனல் போலும். பின் 1930-ஆம் ஆண்டு தனித்தமிழ் இறுதிநிலைத் தேர்விற் குச் சென்று மாநில முதல்வராகத் தேறினர். பனசையார் நிறுவிய பொற்கிழி ஆயிரம் வெண்பொற் காசுகளும் இவருக்கு உரியதாயிற்று. இப் பரிசில் இவர்களை யடைந்து உயர்வு பெற்றது. பின்னர் பரிசில் பெற்றூர் பலருள்ளும் அதனைத் தக்க வகையில் பயன்படுத்தினர் இவரேயாவர். அத்தொகையைச் சேமநிதியாக வைத்துத் தமது ஊதியத் திலும் சிறிது அதனேடு இயைத்து மூன்றேகாற்காணி நன்செய் நிலம் வாங்கினர்கள்.

பின்னர் மீனுட்சிக் கல்லூரிகள் பலவும் ஒன்றுசேர்ந்து 1929 சூலையில் அண்ணுமலேப்பல்கலேக் கழகமாக மாறியது அதற்குப் பதிவாளராக விசுவநாதையர் அமர்ந்தார். மிக்க திறமைவாய்ந்தவர். அப்பொழுது புலவர் பயிற்சிக் கல்லூரியும், புலவர் புகுமுக வகுப்பும் இல்லேயிலிருந்தன. அக் கல்லூரிக்கு இவரது அறிவு, அடக்கம், பாடம் சொல்லுந் திறம், கடமையை ஒழுங்காகச் செய்யுமுறை, ஒழுக்கம் முதலியவற்றை அறிந்த விசுவநாதய்யர் அவர்கள் 1930 சூலேயில் பிள்ளே யவர்களே ஆசிரியராக நியமித்தார். இரண்டாண்டுகள் இங்குச் சிறந்த முறையில் பணியாற்றினுர்கள். பின் இப் பள்ளிகளுள் புகுமுக வகுப்பு எடுபட்டது; பயிற்சிக்கல்லூரி பல்கலேக் கழகத்திற்கு மாற்றப்பட்டது. இந் நிலேயில் இவர்களும் 1—7—32 முதல் பல்கலேக் கழகத்திற் சேர்ந்து புலவர் பயிற்சிக் கல்லூரியிலேயே ஐந்தாண்டுகள் பாடம் சொல்லுமுறையை மாணவர்கட்கு நன்கு கற்பித்து வந்தார்கள். நிரம்ப ஆங்கிலம் படித்த பட்டதாரிகட்கே அத்துறை உரியதாயிருந்தது; தனித்தமிழ் படித்தவர்களும் இத்துறையில் வேலேசெய்யலாம் என்ற முறையை முதன் முதல் நடைமுறையிற் காட்டிய பெரியா ரிவரேயாவர். இக் காலங்களில் புலவர் வகுப்பிற் பயிலும் மாணவர் கட்குச் சமய சம்பந்தமான நூல்களேப் பாடம் சொல்லு மாறு கழகத்தார் நியமித்தார்.

இக்காலங்களில் பல்கலேக்கழக பதிவாளர் விசுவநாத ஐயர் அவர்கள் இவரது திறமையை முன்னமேயே நன்கு அறிந்திருந்தும், முன்னினும் மிக்க மதிப்பளித்து பிள்ளே யவர்களேப் பாராட்டி வந்தார்கள். ஒருசமயம் பதவி உயர்வு ஏற்பட்டபோது இவருக்காக ஐயரவர்கள் எழுதிய குறிப்புரை அறிஞரிடையே இவரைச் சிறப்புற எடுத்துக் காட்டியது. இக்காலங்களில் இவர்கள் ஆங்கிலம் வடமொழி பயின்ற ஆசிரியர்களது தொடர்பினல் ஆங்கில இலக்கியங்களின் நுணுக்கமும் வடமொழி நூல்களில்

சிறிது பயிற்சியும் அடைந்தார். இப் பயிற்சி சமய தத்துவ நூல்களை நன்கு அறிதற்கு பேருதவியாக இருந்தது.

இவ்வாறிருக்குங்கால் இவரது இலக்கண இலக்கியப் படிப்பின் விரிவு, சமய நூல்களின் தெளிவு, நுணுகிப் பொருள்காணும் திறனும் ஆகிய இவைகள் புலவர் வகுப்பிற் பயிலும் மாணவர்கட்கு முழுவதும் பயன்பட வேண்டுமென்று கருதிய பல்கலைக்கழகத்தார் இவரை பயிற்சிக் கல்லூரியினின்றும் மாற்றித் தமிழ்ப்புலவர் பகுதிக்கு 1—7—38-ல் மாற்றிவிட்டார்கள். அன்றுமுதல் 27-5-53 வரை பதினைந்தாண்டுகள் சிறப்புற அத்துறையில் பணியாற்றிவந்தார்கள். இக்காலங்களில் திருச்சி வானொலி நிலையத்தார் இவரது பெருமையை அறிந்து தாமாகவே அழைத்துச் சமயத்துறையில் 'திருவாய்மொழி விளக்கம். என்ற தலைப்பில் பேசும்படி கேட்டுக்கொண்டார்கள். அத்தலைப்பில் பல பேச்சுக்களும், 'இயற்பா' என்ற தலைப்பில் சில பேச்சுக்களும் பல ஆண்டுகள் பேசிவந்தார். இவரது பேச்சை அவ்வப்போது வானொலி நிலையங்களில் கேட்டு மகிழ்ந்த நண்பர்களும் பொதுமக்களும் பலராவர் "இன்று பூவராகப் பிள்ளை பேச்சு, என்று வானொலி நிலையத்தை நோக்கி விரைந்து சென்றூர் பலர். பின் தமது உடல்நிலை காரணமாக நிலையத்தாரிடம் விடைபெற்றுக் கொண்டார். இவரது விடைபேற்றைக் கண்ட நிலையத்தார் இத்தகைய பேச்சாளர் இனி நமக்குக் கிடைப்பது அருமை என்று தமக்குள்ளே கூறி வருந்தினர்கள். இக்காலங்களிலெல்லாம் பாழான வாதநோய் அவருக்கிழைத்த இன்னல் பல. அவர்கள் உண்ட மருந்தும் பல.

(தொடரும்.)

# பாவைப் பாவினியல்பு.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

காஞ்சிப் பொருளுணர்ந்து தவஞான விழுச்செல்வ நிலைக்கண் நின்று பேராயியற்கையினை ஏத்தும் பாடாண் பகுதியினைப் பாடுஞ்செயல் புலவருக்குரியதாதல் தொல்காப்பியத்து பொருளிலக்கணத்தில் தெளிய உணரப்பட்ட மெய்ம்மையாகும். பொருளிலக்கணத்தின் மெய்ப்பொருள் நுட்பம் பொதுள ஞானப் புலமைச் செல்வத்தையும் அருண் நிலையுண்மையும் மெய்ந்நிலையும் அமையத் தேக்கி, சொற்றெளிவாற் விழுமியது பயக்கும் திருவாசகம் புறப்பொருளின் பாடாண் ஒழுக்கப் பகுதியின் பாற்படும். தேவரும் நண்ணமாட்டா விழுப்பொருளினையே பயனாகக்கொண்ட திருவாசக உறுப்புகள் பல, பெண்பாற் கூற்றுகளாக விரவிய தன்மையினை ஆயின் அவை தவம் பரந்த தமிழக வழக்கில், சிலப்பதிகார காலத்தே யொட்டிய பெரு வரவிற்றாக வழங்கிய உண்மையினைப் புலப்படுத்தும். பெண்பாற் கூற்றுக்களாய பாவை, அம்மானை, பொன்னூசல், தோணோக்கம். முதலியன மாதர்கள் விளையாட்டாகக் கருதினும் அவையனைத்தும் இம்மையின்பம் நோக்கி மன்னனையாவது அல்லது வீடுபேற்றின்பம் கருதி இறைவனையோ வாழ்த்திப் பாடும் பண்டைய பாடாண் புலவர்தம் பெருவழக்கென உணரப்படும். மன்னனை வாழ்த்தும் அம்மானைவரியும் ஊசல் வரியும் சிலப்பதிகாரத்தின்கண் வழங்கியுள்ளமை இதற்குரிய சான்றாகும். திருவாசகத்தே வழங்கியுள்ள பாவை, அம்மானை பொன்னூசல் முதலியன அன்பு நெறிக்கண் நின்று இறைவனைப்பெறும் பேற்றினை விளக்குவதினான், திருவாசகம் சிலப்பதிகாரத்தோ டொட்டிய காலத்தென்பது கொள்ளப்படும். என்னையெனின்? அத்தகைய சிறு விளையாடல்களை வாழ்த்துப் பாடல்களின் பெயரொடு பிற்றை ஆசிரியர்களால் பாரித்து அமையப்பாடாததி

ஞலும் எடுத்தாளாததினுனுமென்க. இதனுன் அத்தகைய பாடல்கள் வழக்கில் அருகி வீழ்ந்த உண்மை பெறப்படும். எனினும், சங்க காலத்தில் அரும்பாய் மலர்ந்து நிலவிய சைவம், சங்ககாலத்தை அடுத்துத் தோன்றிய மணிவாசகர் தம் கையில் பெறலரும் காழில் கனியாகக் கனிந்தது.

ஞாலம் புலனுன தத்துவத்தைக் கூறும் ஞானப்பாவைப் பாட்டு, வைகறையிலே நிகழும் இறைவழிப் பாட்டினை உட் கோளாகக் கொண்டு பாடப்படு மென்பது பண்டையோர் வழக்கு, சிறுபொழுது ஆறனுள்ளொன்ருகிய வைகறைப் பொழுது, சிறந்தது பயிற்றலுக்குரிய காலமாகும். மற்றும் காலை, நண்பகல், எற்பாடு மாலை முதலிய காலங்களில் அரு மாலுற்ற மனமும் உலகச் சார்புகளினின்று விடுபட்டு நீங்கித் துயிலுக்குப்பின் தெளிந்து தூய்மையுடன் நிற்குங் கால மாகும். எனவே, தூயமனமொழி மெய்களால் இறைவழி பாட்டினை அத்தகைய காலத்தில் ஆற்றின், அவ்வழி பாட் டால் உயிர் இறைவனை எளிதில் பற்றுமென்பது உறுதி. பாவை, பொதுவாக வைகறை இறைப்பாட் டெனினும் திருவாசகத்து திருவெம்பாவை மார்கழித் திங்களில் நிகழும் வைகறை வழிபாட்டினையே 'குறிக்குமென்பது மார்கழி நீரா டேலோ ரெம்பாவாய்' என்ற குறிப்பினுன் அறியப்படும். இந் நீர்மையதாய மார்கழி வைகறை வழிப்பாட்டை தமிழ் மாதர்கள், இயற்றுவதற்குரிய அரிய நோன்பெனக்கொண்டு, நோன்பு மேற்கொண்டொழுகுதற்குக் கேற்ற திருமந்திரம், பாவைப் பாட்டென உளங்கருதி அதனையே பாடி இறையின் இன்னருளைப்பெற முற்படுவர்.

மார்கழித் திங்கள் வைகறை வழிப்பாடு ஏனைய திங்கள் களின் வழிபாட்டைவிட எற்றுல் சிறந்ததென்பது முதற்கண் சிந்திக்கற்குரியது. மண்ணகத்து வாழும் மக்களுக்குரிய ஓராண்டு விண்ணகத்தே வருக்கொரு நாளாகும். அந்நாளின் சிறுபொழுது மக்களுக்குப் பெரும் பொழுதாகும். அப் பெரும் பொழுதாய ஆறனுள்ளொன்று, மார்கழி தைத்

திங்கள் பகுதியாகும். இரு திங்கட் பகுதி தேவர்களுக்கு சிறுபொழுதின் பகுதியாகியும் அது ஒரு நாளின் கடைக் கூறாகி யுள்ள வைகறையாகும். அவ் வைகறையின் முதற்பகுதியாய மார்கழித் திங்களில் நிகழும் மக்களுக்குரிய இரவின் கடைக் கூறாயமையும் வைகறையே மக்கள் தேவரென்ற இரு திறத் தாரும் இறை வணக்கம் செய்து திருவருள் பெறும் கால மாகும். ஏனைய திங்களின் வைகறை வழிபாட்டினை இயற்றா தலினான் நேரும் குறைபாட்டினை இம் மார்கழித் திங்கள் நோன்பு, பொதுவும் சிறப்புமாக, நீக்கி நிறைவு படுத்துமென் பதூஉம், இறைவன் மூல பண்டாரம் வழங்கும் காலம் இஃதென்பதூஉம் மணிவாசகர் கருத்தாகும். இதனைக் கருத் துட்கொண்டே மக்களுயிர்கள், இருள் மலம் ஒழிய ஒளி அருள்பெற்று அன்பு நெறியில் நின்று மாண்புற, மார்கழித் திங்கள் வைகறை வழிப்பாட்டை திருவாதவூரர் திருமந் திரப் பாவையாக மொழிந்தாரென்பது

'மன இருளற்று உறங்காமல் மன்னுபரிபாக அருள்
செல முழுக வருகவெனச் செப்பல் திருவெம்பாவை'

என்பதால் துணியப்படும். திருவெம்பாவையின் முதற் செய் யுளில் வரும் 'மாதேவன் வார் கழல்கள் வாழ்த்திய வாழ்த் தொலி', மக்களின் துயிலெழுப்பும் முறையா யமைந்து அதனால் உயிர் மலங்கெட்டு அடையும் பலனைக் காட்டும் பள்ளியெழுச்சிப் பாக்களில் வந்துள்ள 'பள்ளி எழுந்தரு ளாயே' யென்ற அடியொற்றி யெழுந்ததினால், பாவைப் பாடலொடு திருப்பள்ளி யெழுச்சியும் ஒரு வாற்றான் இயை புடைத்தென்பதும் அறிஞர் கூறுவர்.

'ஏர் மருவும் பள்ளி யெழுச்சி பணிவிடை கேட்டார்வ
முடனாண்ட வாற்கன்பு செயுமில்லே'

எனவே இறைவன்பால் மக்கள் அன்புசெய்து வழிபடுமியல்பு யாவும் வைகறைப் பொழுதில் சாலவும் செய்யப்படவேண்டு மென்பதாம், அதுபோது துயிலொழிந்த மனம் உலகப் பற்றற்றும் மாசற்றும் தூய்மை நிலையெய்தி நிற்றலால் அதனை, இறையுணர்வின்பால் படுத்தவே மனம் திருவருள் பெற்றுத்

திகழுமென்பதூஉம், அஃது இயற்கையினை யொட்டியுளதென் பதூஉம் உய்த்துணரப்படும்.

இவ்வாறு அன்பு நெறியில் நின்று சிவத்தொண்டு புரியும் மடநல்லார், மார்கழித்திங்கள் வைகறைப்பொழுதில் நீராட, பிற மாதர்களைத் துயிலெழுப்பிப்பின் பலரோடு குழுவி, இறைவனை மனத்தால் சிந்தித்து நாவாரப்பாடி யாக்கையால் வணக்கம் செய்துவரும் முத்திற வழிபாட்டை திருவண்ணமலையில் கண்ணுறக்கண்ட திருவாதவூரர், மும்மல இருளில் உறக்கங் கொள்ளாது விழித்திருக்கும் பரிபக்குவமுடைய ரொருவர், இறைவனது பொங்கித் ததும்பும் கருணை வெள்ளத்தே, உய்யகொள்ள, முழுக வருக என அறைகூவி யழைக்கும் பான்மையில் திருவெம்பாவையினை அமையப் பாடியருளினர். மங்கைமார் துயிலகற்றி ஏனைய மங்கையர்களையும் நீராட அழைத்தேகும் காட்சி மணிவாசகரது திருவுள்ளத்தே உலக உற்பத்தி காலத்தில் நவசக்திகளும் தொழிற்படும் முறையை தோற்றுவித்தது. சிவன்பால் வைத்த இவரது சிந்தை சிவஞானமென்னும் ஊற்றாக விளங்கி கவியருவியாகப் பெருகிச் சொரியலாயிற்று. உடனே 'ஆதியும் அந்தமுமிலா சோதியாய இறைவனை யாம் பாடக் கேட்டேயும், எந்தோழி இன்னுந் துயிலுதியோ! இன்னம் புலர்ந்தின்றோ! கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே! கண்ணுக்கினியானைப் பாடி கசிந்துள்ளம் உள்நெக நின்றுருகாயோ! தீசேர் மெழுகொப்ப எங்கோனது சிலம்பும் பாடாயோ! கோழி சிலம்ப, குருகுகளியம்ப, வெண்சங்கம் இயம்ப, யாம் கேழில் பரஞ்சோதி, கேழில் பரங் கருணை, கேழில் விழுப்பொருள்கள் பாடினோம்! கேட்டிலையோ? பைங்குவளைக் கார் மலரால், செங்கமலப்பைம் போதால் அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால் தங்கள் மலங் கழுவுவார் வந்து சார்தலினால் எங்கள் பிராட்டியும் எங்கோமானும் போன்றிசைந்த பூத்திகழும் பொய்கையில் கலந்திகழ நம் பெருமானைப் பாடாயோ! என்றிவ்வாறு சிறப்புறு பாடல்களால் மணிவாசகர் பரமனையே பாடுவாராயினர்.